நாள்: 25.04.2020

## நாமக்கல் மாவட்டம்

**கனரக வாகனங்களை, கிருமிநாசினி திரவம் தயாரித்து சுத்தம் செய்யும் பணி குறித்த ஓட்டுநர்கள் மற்றும் லாரி உரிமையாளர்களுக்கான செயல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.**

நாமக்கல் மாவட்டத்தில் சரக்கு வாகன போக்குவரத்து இந்திய அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நாமக்கல் மாவட்டத்தில் ஆழ்துளை கிணறு தோண்டும் ரிக் எந்திர வாகனங்கள், சரக்கு போக்குவரத்து கனரக வாகனங்கள், எரிவாயு ஏற்றிவரும் சிலிண்டர் வடிவிலான லாரிகள், கோழி முட்டைகள் ஏற்றி வரும் லாரிகள், இறைச்சி கோழிகள் ஏற்றி வரும் வாகனங்கள் என மொத்தம் 40,000 க்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் உள்ளன. இவை இந்தியா முழுவதும் சென்று வருகின்றன. இந்த வாகனங்களில் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த 10,000 க்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள் மற்றும் கரூர், திருச்சி, ஈரோடு, பெரம்பலூர், சேலம், தர்மபுரி உள்ளிட்ட அருகில் உள்ள மாவட்டங்களைச் சேர்ந்த ஓட்டுநர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.

கொரோனா ஊரடங்கு அமலில் உள்ள சூழ்நிலையில் பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான காய்கறிகள், பழ வகைகள், பருப்பு வகைகள், எண்ணெய் ஆகிய அத்தியாவசிய பொருட்களின் விலைக்கட்டுப்பாட்டிற்கு இந்த வாகன ஓட்டுநர்களின் பங்கு இன்றியமையாததாகும். இந்த பொருட்கள் பல்வேறு வட மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு கொண்டு வரப்படுகின்றன. மேலும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் அத்தியாவசிய பொருட்களை ஏற்றிச் செல்லும் பணியிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இன்று (25.04.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் கொரோனா நோய்த்தொற்று தடுக்கும் பணிகளில் லாரி ஓட்டுநர்கள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்த சரக்கு வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு மாவட்ட கொள்ளை நோய் நிபுணர் மரு.சதீஸ்குமார் அவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் கிருமி நாசினி மருத்து தயாரிக்கும் முறைகள், கனரக வாகனத்தில் கிருமி நாசினி மருத்து அடிக்க வேண்டிய இடங்கள் குறித்தும், விசைத்தெளிப்பான்களை பயன்படுத்தும் முறைகுறித்தும், சிறிய அளவிலான கைத்தெளிப்பானை பயன்படுத்தும் முறை குறித்தும் விளக்கினார்கள்.

இந்த செயல்முறை விளக்க பயிற்சியில் லாரி ஓட்டுநர்கள் மிகக்குறைந்த செலவில் 10 லிட்டர் தண்ணீரில் 350 கிராம் பிளீச்சிங் பவுடரை கரைத்து, 30

நிமிடங்களுக்கு பின்னர் கிடைக்கும் தெளிந்த திரவத்தை கிருமி நாசினியாக பயன்படுத்தும் முறைகுறித்து பயிற்சி பெற்றதுடன், வாகனத்தில் விசைத்தெளிப்பான்கள் பயன்படுத்தியும், கைத்தெளிப்பான் பயன்படுத்தியும் கிருமி நாசினி செய்வது குறித்து பயிற்சி பெற்றனர். மேலும் பல்வேறு கிருமி நாசினி மருந்துகளை தண்ணீரில் குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து கிருமி நாசினி திரவம் தயாரிக்கும் முறைகள் குறித்து இந்த செயல்விளக்க பயிற்சியில் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த செயல்விளக்க பயிற்சி வகுப்பில் மோட்டார் வாகன ஆய்வாளர் என்.ஆர்.சரவணன், மாவட்ட இளநிலை பூச்சியியல் உதவியாளர் திரு.குணசேகரன், மாநில லாரி உரிமையாளர் சங்க செயலாளர் திரு.வாங்கிலி, நாமக்கல் வட்ட லாரி உரிமையாளர் சங்க பொருளாளர் திரு.ஸ்ரீரங்கன், லாரி உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.